Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-14 6:55 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ் விளம்பரம்™ • VLAMBARAM™ Canada's Oldest Tamil Newspaper




35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 20 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 15, 2025

# மத்திய அரசின் வரவுசெலவுத் திட்டத்தின் முன்னோட்டம்

கனடியப் பிரதமர் மார்க் காணி தலைமையிலான லிபரல் கட்சியின் மத்திய அரசிற்கான முதலாவது வரவுசெலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் 2025 நொவெம்பர் 4ஆம் திகதி நிதி அமைச்சர் பிரான்சுவா-பிலிப் ஷம்பெயினால் (Francois-Philippe Champagne) சமர்ப்பிக்கப்பட உள்ளது.

மத்திய அரசின் வரவுசெலவுத் திட்டம் வழக்கமாக வசந்தகால ஆரம்பத்திலேயே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆனால், இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடந்தபடியால் மத்திய அரசு வசந்தகாலத்தில் சில வாரங்கள் மட்டுமே நாடாளுமன்றத்தை நடத்தியது. இதனால் இம்முறை வரவுசெலவுத் திட்டம் இலையுதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என லிபரல் கட்சியின் புதிய அரசு தெரிவித்திருந்தது.

அதைத்தொடர்ந்து லிபரல் கட்சியின் அமைச்சர்கள் தங்கள் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் சமர்ப்பிப்பதற்காக மத்திய அரசின் செலவினங்களில் சேமிப்பைக் கொண்டுவருவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்திருந்தனர். கனடியப் பிரதமரும், நிதி அமைச்சரும் ஏனைய அமைச்சர்களிடம் அரச நிர்வாகத் துறையினரிடம் அரச விதிமுறைகளைக் குறைத்தும் தளர்த்தியும் அரச செலவினங்களில் சேமிப்பைக் கண்டறியுமாறு கேட்டிருந்தனர். அத்துடன் நிதி அமைச்சர் மத்திய அரசின் பொதுச் சேவை நிர்வாகத்துறையிடம் மத்திய அரசின் தற்போதைய மற்றும் திட்டமிடப்பட்டுள்ள அனைத்து தனியார் நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களையும் மதிப்பாய்வு செய்யுமாறும் கேட்டிருந்தார்.

கடந்த மே மாதத்தில் மார்க் காணி ஒக்ரோபர் மாதத்தில் லிபரல் அரசு வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் லிபரல் கட்சி அரசின் இலையுதிர்கால நிகழ்ச்சிநிரலை ஊடகவியலாளர்களுக்கு விளக்கும்போது அரச அவைத்தலைவர் ஸ்ரீவன் மெக்கினன் (Steven Mackinnon), "நிதியமைச்சர் பிரான்சுவா-பிலிப் ஷம்பெயின் ஒக்ரோபர் மாதத்தில் ஒரு வரவுசெலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வார். அதுபற்றிய விபரங்களுக்குள் நான் செல்லவில்லை. ஆனால், நிதி அமைச்சரும், பிரதமரும் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துமாறு தெரிவித்திருந்தனர்" என்றார்.

கடந்த நாடாளுமன்ற கேள்வி நேரத்தின் போது நிதி அமைச்சர் நொவெம்பர் 4ஆம் திகதி மத்திய அரசு நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் என்று குறிப்பிட்டார்.



Prime Minister Mark Carney and Finance Minister François-Philippe Champagne

லிபரல் அரசு வரும் நிதியாண்டான 2026-2027இல் மத்திய அரசின் செலவினங்களை 7.5%ஆல் குறைக்கவும் அதற்கு அடுத்த நிதியாண்டான 2027-2028இல் மத்திய அரசின் செலவினங்களை 15% ஆல் குறைக்கவும் திட்டமிட்டுள்ளது. இவ்வாறு மத்திய அரசின் செலவினங்கள் குறைக்கப்பட்டாலும் மத்திய அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக்குறை எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிகமாகவே இருக்கும் என பிரதமர் மார்க் காணி செப்ரெம்பரில் தெரிவித்திருந்தார்.

2024 டிசெம்பரில் மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை $61.9 பில்லியனாக இருக்கும் என அப்போதைய லிபரல் அரசு கூறியதன் பிற்பாடு எந்த ஒரு வரவுசெலவுக் கணக்கு விபரமும் மத்திய அரசால் சமர்ப்பிக்கப்படவில்லை.

"மத்திய அரசின் சமீபத்திய அறிவிப்புகளை நன்கு ஆராய்ந்தபிறகு 2024-2025ஆம் நிதியாண்டில் மத்திய அரசு சமர்ப்பித்த வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட 2025-2026ஆம் நிதி ஆண்டிற்கான $48 பில்லியன் துண்டு விழும் தொகையுடன் ஒப்பிடும்போது இம்முறை சமர்பிக்கப்படவுள்ள வரவுசெலவுத் திட்டத்தில் இது $80 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை" என்று மொன்றியல் வங்கியின் (BMO) மூத்த பொருளாதார நிபுணர் ரொபர்ட் காவ்சிக் (Robert Kavcic) 'Financial Post' ஊடகத்திற்குத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் மார்க் காணி ஊடகங்களுக்கு வரவுசெலவுத் திட்டத்தின் பற்றாக்குறை அளவை விளக்கும்போது அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்க அரசு விதித்த சுங்கவரியால் பாதிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு கனடிய மத்திய அரசு வழங்கும் ஆதரவுகள், நேட்டோ செலவினங்களை அதிகரிப்பதற்காக கனடிய அரசாங்கம் வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்ற செய்யப்படும் முதலீடுகள் மற்றும் லிபரல் கட்சி தேர்தலின்போது அளித்த உறுதி மொழிக்கேற்ப கடந்த ஜூன் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட குறைந்த வருமான வரி விதிப்பு வீதத்தை 15%இல் இருந்து 14% இற்குக் குறைத்ததால் ஏற்படும் வருமான இழப்புகள் உட்பட்ட பல காரணிகளைச் சுட்டிக்காட்டினார். அவர் ஊடகங்களுக்குக் கூறுகையில், "மேற்கூறிய காரணங்களால் வரவுசெலவுத் திட்டத்தின் பற்றாக்குறையில் தாக்கங்கள் கட்டாயம் இருக்கும். ஆனால், அது மிகவும் வலுவான ஒரு கனடாவை உருவாக்கும்" என்றார்.

நிதி அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், "மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அரசின் நிர்வாக செலவினங்களுக்கும் (Operational Budget) மூலதன முதலீடுகளுக்கும் (Capital Investments) வித்தியாசம் வெளிப்படையாக இருக்கும். இதற்குரிய முக்கிய காரணம் மத்திய அரசு தனது நிர்வாகச் செலவினங்களில் சேமிப்பை அடையாளப்படுத்தவும் தனது மூலதன முதலீடுகளில் அதிகரிப்பைக் காட்டுவதற்குமாகும். இது மிகவும் தெளிவாக வரவுசெலவுத் திட்டத்தில் காட்டப்படும்" என்றார்.

நிதி அமைச்சரிடம் அவர் எவ்விதமான செலவின குறைப்புகளை எதிர்பார்க்கிறார் என ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், "எங்களது முதலீடுகள் எமது குறிக்கோளாக இருப்பதால், எங்களது செலவினக் குறைப்பில் நாங்கள் கடுமையாக இருப்போம். நீங்கள் செலவினங்களைக் குறைத்தால் நீங்கள் அதிக மூலதனத்தை முதலிடலாம். இதனால் செலவினக் குறைப்பிற்கு கடினமான தெரிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டியிருக்கும்" என்றார்.

மத்திய அரசில் லிபரல் கட்சி சிறுபான்மையாக இருப்பதால் வரவு-செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற மார்க் காணியின் அரசிற்கு குறைந்தபட்சம் ஓர் எதிர்க்கட்சியின் ஆதரவு தேவைப்படும். வரவுசெலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவது ஆளுங்கட்சிக்கு நம்பிக்கை வாக்கெடுப்பாகக் கருதப்படும். இதனால் நாடாளுமன்றத்தில் மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமல் போகுமானால் அரசு பதவியை இழக்கும்.

ஏற்கனவே வசந்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவுசெலவுத் திட்டத்தை இலையுதிர்காலமளவும் தாமதப்படுத்தியதற்கு பழமைவாதக் கட்சியின் தலைவர் பியர் பொலிவ் (Pierre Poilievre) ஊடகங்களில் லிபரல் அரசை விமர்சித்து இருந்தார். தற்போது பழமைவாதக் கட்சியின் தலைவர், "லிபரல் கட்சியின் பொறுப்பற்ற செலவினங்களை வரவு-செலவுத் திட்டத்தில் குறைக்க வேண்டும்" என வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், "லிபரல் கட்சியின் முன்னாள் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவை விட

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









# House for Sale / Lease / Condo / BSMT

## Condo for Lease (Brand NewCondo)

* North East view
* 2 Bed Room
* 2 Washroom
* 2 years New Luxury condo
* Huge Balcony
* 1 Parking
* Easy Access to Hwy, TTC, Schools Amenities

(Kennedy / Highway 401)

**Available Nov. 01/2025**

George Paranthaman **
Call : 416 277 9044

## Condo for Sale

- 1 Bed Room + DEN
- 1 Full Washroom
- 1 Parking
- 686 Sq. Ft.

+ 74 Sq. Ft. terrace

Walking Distance to Subway

Don Mills / Eglinch

Vishal **
Call : 416 629 1973

## Detached Home for Sale

3 Bed Room Renovated
(West Rouge Neighbour hood - Toronto)

Walk to Beach....
Go Station
and TTC
Please Call.......

Amal Joseph*
Call : 416 300 8294

## Commercial Space for Lease

417 Sq. Feet
Office Space
GTA Square
2nd Floor

George P *
Call : 416 277 7054

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

Tel: 416-321-6969

* Sales Rep.
** Broker

* Independently owned and operated.

Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-14 6:55 PM Page 3





Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# நெருக்கடிக்குள் சிக்கியுள்ள அனுரவும் ஆணைக்குழுவும்

## – அரவின் –

அனுரகுமார திசாநாயக்க அரசாங்கம் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்திருக்கின்ற நிலையில் தடுமாற ஆரம்பித்திருக்கிறது. இந்த அரசாங்கத்தின் பலம் அதன் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு செயற்பாடுகள் தான்.

மற்றபடி இந்த அரசாங்கத்திடம் முற்போக்கான அல்லது புதிய ஒரு பொருளாதாரத் திட்டங்களோ, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கின்ற திறனோ, அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை எட்டக்கூடிய ஆற்றலோ கிடையாது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளின் ஊடாக இந்த அரசாங்கம் நாட்டு மக்கள் மத்தியிலும், வெளிநாட்டு அரசாங்கங்கள் மத்தியிலும் எதிர்பார்ப்புகளை உருவாக்கியிருக்கிறது. ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது.

சில அமைச்சர்கள் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் அதில் முக்கியமானது. அவர்களின் கடந்த காலம் அவர்களைப் பற்றிய சந்தேகங்களை எழுப்ப வைத்திருக்கிறது.

உரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்தபோது, அரசாங்கத்துக்கு இழப்புகளை ஏற்படுத்தினார் என, எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி மீது ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

வருமானத்துக்கு அதிகமான சொத்துக்களை சேர்த்திருப்பதாக, வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க மீது குற்றச்சாட்டு இருக்கிறது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர மீது போர்க்கால செயற்பாடுகள் தொடர்பாக, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

இவ்வாறான குற்றச்சாட்டுகளை அனுராவின் அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை. அவற்றுக்குப் பதில் கூறுவதற்குக்கூட அரசாங்கம் தயாராக இல்லை.

இந்தநிலையில் தற்போதைய அரசாங்கம் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், எதிர்க்கட்சிகளை முடக்கிப் போடுவதற்கும் இலஞ்ச, ஊழல் தொடர்பான விசாரணைகளைத் தீவிரப்படுத்தி வருகிறது.



இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு சுயாதீனமான ஒன்று. ஆனாலும், அதில் போதுமான ஆளணி இல்லை, அதனை வலுப்படுத்த வேண்டும் என உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், அமெரிக்கா போன்ற தரப்புகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

இந்தக் கட்டமைப்பு வலுவாக இருந்தால், மோசடிகளுக்குள் நாடு சிக்கிக் கொள்ளாது என்ற நம்பிக்கை இந்தத் தரப்புகளுக்கு இருக்கின்றன.

இப்போதைய நிலையில், அனுரகுமார திசாநாயக்க அரசாங்கம் தனது சொந்தப் புத்தியில் இயங்கக்கூடிய நிலையில் இல்லை.

அது அமெரிக்கா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற தரப்புகள் கூறுவதை ஏற்றுக்கொண்டு செயற்படுகின்ற நிலையிலேயே இருக்கிறது. ஏனென்றால் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவில்லை.

இந்த நிலையில், தங்களின் சொந்த முடிவுக்கு அமைய செயற்பட முனைந்தால், இந்தத் தரப்புக்கள் மீட்சிக்கான உதவிகளை நிறுத்தி விடும். அப்படியான நிலை ஏற்பட்டால், கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தைப் போல, பாதி வழியிலேயே ஓடிப் போக வேண்டிய நிலைதான் ஏற்படும்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டிய கட்டாயத்துக்குள் இருக்கின்ற நிலையில், எதிர்க்கட்சிகள் நெருக்கடி கொடுக்கத் தொடங்கியுள்ளன. அரசாங்கம் மட்டுமல்ல, இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவும்கூட அதில் சிக்கியிருக்கிறது.

அனுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்த பின்னர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின், பணிப்பாளராக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திசநாயக்கவை நியமித்திருந்தார்.

எதிர்க்கட்சியில் உள்ள பல அரசியல்வாதிகள் அவரது விசாரணை வளையத்திற்குள் சிக்கியுள்ளனர். இந்த நிலையில், நீதிபதி ரங்க திசாநாயக்க ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்குவதற்குத் தகுதியற்றவர் எனப் போர்க்கொடி உயர்த்தப்படுகிறது.

உதய கம்மன்பிலதான், அவருக்கு எதிராக முதலில் குற்றம்சாட்டினார்.

இப்போது பல பக்கங்களில் இருந்தும் அவருக்கு நெருக்கடி கொடுக்கப்படுகிறது. ஆரம்பத்தில் ரங்க திசாநாயக்க தனது மகனுக்கு கொழும்பின் பிரபல பாடசாலையில் அனுமதி பெற்றுக் கொண்டதில் முறைகேடு இடம்பெற்றதாக குற்றச்சாட்டப்பட்டது. அது நியாயமான முறையிலேயே பெறப்பட்டதாக ஆணைக் குழு வாதிட்டது. அவர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து ஊடகச் சந்திப்பு நடத்தினார். குற்றம் சாட்டுபவர்களை நீதியின் முன் நிறுத்தப் போவதாகவும் எச்சரித்தார்.

அதன் விளைவாக இவர் மீது இன்னும் மோசமான குற்றச்சாட்டுகள் வரத் தொடங்கியிருக்கின்றன.

நீதிபதி ரங்க திசாயக்க மீது நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன் வைத்திருக்கிறார்.

ஊவா மாகாண முதல்வராக இருந்த போது, தமிழ் ஆசிரியை ஒருவரை மண்டியிட்டு மன்னிப்புக் கேட்க வைத்தவர் தான் சாமர சம்பத் தசநாயக்க.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்.

தன்மீது மூன்று குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்றும், அவற்றுக்கு எதிராக ரங்க திசாநாயக்க, வழக்குத் தாக்கல் செய்வார் என்று கூட அவர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மத்திய வங்கியில் பிணைமுறி விற்பனையில் பாரிய மோசடி இடம்பெற்றது நினைவிருக்கலாம்.

15 ஆயிரம் கோடி ரூபாய் வரை மோசடி இடம் பெற்றதாக குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து சரியான விசாரணைகள் முன்னெடுக்கப்படவோ குற்றமிழைத்தவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படவோ இல்லை.

அப்போது மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தவர் சிங்கப்பூர் குடிமகனான அர்ஜுன மகேந்திரன். வெளிநாட்டுக் குடிமகனாக இருந்த போதும் அவர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ஆக்கப்பட்டார்.

அதற்குக் காரணமாக இருந்தவர் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடிகளை அடுத்து அவர் பதவியில் இருந்து விலகும் நிலை ஏற்பட்டது.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு நீதிமன்றத்தினால், வெளிநாடு செல்வதற்கு இடைக்காலத் தடையும் விதிக்கப்பட்டது. அந்தத் தடை ஒரு கட்டத்தில் நீக்கப்பட்ட போது, அவர் தப்பிச் சென்று விட்டார்.

சிங்கப்பூரில் இருந்து அவரைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு தற்போதைய அரசாங்கம் கூட முயற்சித்து தோல்வி கண்டிருக்கிறது.

அர்ஜுன மகேந்திரன் தப்பிச் செல்வதற்கு நீதிமன்றத் தடையை நீக்கியவர், வேறு யாரும் அல்ல. அப்பொழுது கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதிபதியாக இருந்த ரங்க திசநாயக்கதான்.

இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் சாமர சம்பத். அது மாத்திரம் அல்ல, ரங்க திசாநாயக்கவின் இரண்டு மனைவிமார் மத்திய வங்கியில் பணியாற்றுகின்றனர் என்றும், அவரது இரண்டாவது மனைவி அர்ஜுன மகேந்திரனின் கீழ் பணியாற்றி இருந்தார் என்றும், நாடாளுமன்றத்தில் கிழித்து தொங்கவிட்டிருக்கிறார்.

இவ்வாறான ஒருவரிடம், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் பதவி கொடுக்கப்பட்டது சரியா என்பதே அவரது கேள்வி.

இதுபோல பல குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.இது ரங்க திசநாயக்கவின் பதவிக்கு சிக்கலை ஏற்படுத்தும் போலவே தெரிகிறது. ஏனென்றால் ரங்க திசாநாயக்கவின் மீது அரசாங்கம் நம்பிக்கை வைத்திருந்தாலும் கூட, அவரை நாட்டு மக்கள் நம்புகின்ற நிலை இருக்குமா என்பது சந்தேகம்.

எதிர்க்கட்சிகள் எழுப்புகின்ற கேள்விகள், சுமத்துகின்ற குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படுகின்ற சூழல் ஏற்பட்டிருக்கிறது.

இது அரசாங்கத்துக்கு எதிரான நிலையை ஏற்படுத்த கூடும். ஏற்கனவே அமைச்சர் பிமல் ரத்நாயக்க மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™

35ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# மத்திய அரசின் ....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தற்போதைய பிரதமர் மார்க் காணி அதிக செலவினங்களைச் செய்கிறார். அவரது வரவுசெலவுத் திட்டத்தில் வரும் துண்டு விழும் தொகை ஜஸ்ரின் ரூடோவின் வரவுசெலவுத் திட்டங்களில் வந்த துண்டு விழும் தொகைகளைவிட மிகப் பெரியதாக இருக்கப் போகிறது. இந்த நிதியாண்டில் (2025-2026) ஏற்கனவே மூன்றில் இரண்டு பங்கு முடிவடைந்த பிறகே அரசு வரவு-செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்துகிறது.

லிபரல் அரசாங்கத்திற்கே இந்த நிதி ஆண்டில் என்ன செய்தனர், என்ன செய்யப் போகின்றனர் என்பது தெரியாமல் இருக்கிறது" எனக் கூறப்பட்டுள்ளது.



Conservative Leader Pierre Poilievre Thanks: Dave Chan/AFP via Getty Images

பழமைவாதக் கட்சியின் தலைவரிடம் அவர்களுடைய கட்சி லிபரல் அரசின் வரவுசெலவுத் திட்டத்தை ஆதரித்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற உதவுவார்களா எனக் கேட்கப்பட்டபோது அவர், "லிபரல் அரசு சமர்ப்பிக்கும் வரவுசெலவுத் திட்டத்தின் கணக்குகளில்தான் தாங்கள் ஆதரிப்பதோ இல்லையோ என்பது தங்கியுள்ளது" என்றார்.



Finance Minister François-Philippe Champagne Thanks: Global News

கனடியப் பிரதமர் மார்க் காணியும் மத்திய அரசின் நிதி அமைச்சர் பிரான்சுவா-பிலிப்



Prime Minister Mark Carney Thanks: Adrian Wyld The Canadian Press

ஷம்பெயினும் ஒக்ரோபர் 10ஆம் திகதி ஓர் ஊடகவியலாளர் மாநாட்டை ஒட்டாவாவில் நடத்தி வரவுசெலவுத் திட்டத்தில் இம்முறை வரவிருக்கும் மூன்று விடயங்களை ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தனர்.

குறைந்த வருமானமுடைய இலகுவாக வருமான வரிப் படிவங்களை நிரப்பி அனுப்பக்கூடிய நிலையில் உள்ள மக்களுக்கு, முன்கூட்டியே வருமானவரி விபரங்கள் நிரப்பிய படிவத்தை கனடிய வருமானவரி நிறுவனம் (Canada Revenue Agency) தயாரித்து சமர்ப்பிக்கும். இதன்மூலம் வருமானவரிப் படிவங்களை தயாரிக்க சிரமப்படுபவர்களும், வருடந்தோறும் வருமானவரிப் படிவங்களை நிரப்பி அனுப்பாததால் அதன்மூலம் வரும் சலுகைகளைப் பெறமுடியாமல் அல்லல்படும் குறைந்த வருமானம் உள்ளவர்களும் நன்மை அடைவர்.

மார்க் காணி உரையாற்றுகையில், "குறைந்த வருமானம் கொண்ட மில்லியன் கணக்கான மக்கள் தங்கள் வருமானப் பத்திரங்களை தாக்கல் செய்வதில்லை. இதனால், தமது வாழ்வாதாரத்திற்கு அரசு வழங்கும் உதவிப் பணத்தின் தேவை அதிகம் உள்ள மக்களுக்கு அது கிடைப்பதில்லை. இந்த முன்கூட்டியே வருமான வரிப்படிவங்கள் நிரப்பி சமர்ப்பிக்கப்படும் திட்டம் 2026ஆம் வரி ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும். 2028 ஆம் வரி ஆண்டிற்குள் இத்திட்டத்தால் 5.5 மில்லியன் மக்கள் பயனடைவர். இதன்மூலம் உரிமை கோராமல் விடப்படும் நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர் பணம், அப்பணம் தேவைப்படும் மக்களைச் சென்றடையும்" என்று கூறினார்.

ஜஸ்ரின் ரூடோவின் அரசு 2023ஆம் ஆண்டில் கனடிய வருமான வரி நிறுவனம் (CRA) ஒரு முன்கூட்டியே வருமான வரிப்படிவங்கள் நிரப்பி சமர்ப்பிக்கும் திட்டத்தை பரீட்சார்த்தமாக ஆரம்பித்திருந்தது. இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பிரான்சுவா-பிலிப் ஷம்பெயின் உரையாற்றுகையில், "எங்களிடம் ஏற்கனவே இவ்வாறு ஒரு முன்கூட்டியே வருமான வரிப் படிவங்கள் நிரப்பி சமர்ப்பிக்கும் தொழில்நுட்பம் உள்ளது. இப்போது அதை நாம் மேம்படுத்தி அதிகளவில் உபயோகிக்க தயார்ப்படுத்த வேண்டும்" என்றார்.

ஒட்டாவாவில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் மார்க் காணி மத்திய அரசு தேசியப் பாடசாலை உணவுத்திட்டத்தை ஆண்டுதோறும் $216 மில்லியன் பண உதவி வழங்குவதன் மூலம் நிரந்தரமாக்கும் என்று அறிவித்தார்.

இந்தத் தேசியப் பாடசாலை உணவுத் திட்டம் ஜஸ்ரின் ரூடோவின் அரசால் 2024-2025 ஆம் கல்வியாண்டில் தொடங்கி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு பில்லியன் டொலரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது நிறைவுபெறும் 2029ஆம் ஆண்டில் இருந்து மார்க் காணியின் அரசு இத் திட்டத்தை நிரந்தரமாக்க வருடம்தோறும் நிதியுதவி வழங்கும். இத்திட்டம் ஆரம்பித்து வைக்கும்போது வருடம் தோறும் 400,000 சிறுவர்களுக்கு உணவு வழங்கும் திட்டமாக உருவானது.




Prime Minister Mark Carney Thanks: The Canadian Press/Justin Tang.

மார்க் காணி ஊடகவியலாளர் மாநாட்டில் மத்திய அரசு இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் கொண்டுவரும் அடுத்த விடயமாக 'வலுவான கனடாவிற்கான அனுமதி அட்டை' (Canada Strong Pass) திட்டத்தை விடுமுறை காலத்திற்கும் அடுத்த கோடை காலத்திற்கும் தொடர உள்ளது என்று தெரிவித்தார். லிபரல் அரசின் தேர்தல் வாக்குறுதியின்படி கடந்த கோடை காலத்தில் இந்த 'வலுவான கனடாவிற்கான அனுமதி அட்டை' வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



Finance Minister Francois-Philippe Champagne Thanks: REUTERS/Blair Gable/File Photo

இந்த அனுமதி அட்டையைப் பாவித்து கனடாவில் உள்ள பூங்காக்கள் மற்றும் அருங்காட்சியகங்களுக்குச் செல்லுவதற்கு இலவச அனுமதியை மத்திய அரசு வழங்கியிருந்தது. அத்துடன் VIA தொடருந்தில் பயணம் செய்யும் இளைஞர்களுக்கு இவ் அனுமதி அட்டையை பாவிப்பதன்மூலம் பயணச் சீட்டில் தள்ளுபடிகளையும் மத்திய அரசு வழங்கியிருந்தது. தற்போது மத்திய அரசு இந்த அனுமதி அட்டை வழங்கலை விடுமுறை காலத்திற்கும் அடுத்த கோடைகாலத்திற்கும் நீடித்துள்ளது.

கடந்த கோடைகாலத்தில் மக்கள் இந்த அனுமதி அட்டையைப் பாவித்து பூங்காக்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கும் சென்றது 15%ஆல் அதிகரித்திருந்தது.

பிரான்சுவா-பிலிப் ஷம்பெயின் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கையில், வலுவான கனடாவிற்கான அனுமதி அட்டையினுடைய பெறுமதி $100 மில்லியன் என்று கூறினார்.



Prime Minister Mark Carney Thanks: Toronto Star

மேலும் இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் பிரதமர் மார்க் காணி, "இந்த வரவுசெலவுத் திட்டத்தில் பொறுப்புடன் நடைமுறைச் சாத்தியமான தெரிவுகளையே செய்யப் போகிறோம். மக்கள் பாதுகாப்பிற்குத் தேவையான நலத் திட்டங்களான கனடா குழந்தைகள் நலன் திட்டம், ஊனமுற்றோர் நலன் திட்டம் (Disability Benefits) மற்றும் இவ்வாறான உதவிகள் வழங்கும் திட்டங்கள் இப்போது மட்டும் அல்ல எதிர்காலத்திலும் தொடருவதை எமது அரசாங்கம் உறுதி செய்யும்" என்றார்.

Get in touch for your perfect home!

PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-14 6:55 PM Page 6



# தீர்வைத் திணிக்கும் அரசாங்கம்

## – முகிலன் –

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதாகக் கூறினாலும், அது தமிழ் மக்களின் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்து பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகிறதா அல்லது தான் நினைத்த ஒரு தீர்வைத் திணிக்க முனைகிறதா என்ற கேள்வி உருவாகியிருக்கிறது.

ஒரு பிரச்சினையைத் தீர்க்கின்ற விடயத்தில் இரண்டு விதமான அணுகுமுறைகள் உள்ளன.

ஒன்று, சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசி, குறைபாடுகளை நிவர்த்தி செய்து, நியாயமான முறையில் தீர்வு காண்பது. இவ்வாறு பிரச்சினைகள் தீர்க்கப்படுவது குறைவு. ஆனால், இதுதான் எந்த ஒரு பிரச்சினைக்கும் நிரந்தரமான தீர்வுக்கு வழி வகுக்கும்.

இன்னொன்று, பிரச்சினையை எதிர் கொள்பவர்கள் கூறுகின்ற கருத்தைக் கவனத்தில் எடுக்காமல், தாங்கள் விரும்புகின்ற தீர்வைத் திணிப்பது. இதற்கு உதாரணம், 1987ஆம் ஆண்டு இந்திய -இலங்கை ஒப்பந்தம். இது தமிழரின் பிரச்சினைகள், அபிலாசைகள்-கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து, செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு அல்ல.

இந்தியா, தான் நினைத்த தீர்வை தமிழருக்குத் தீர்வாகக் கொடுத்தது. அதனால்தான் இந்த உடன்பாட்டின்மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை இன்றுவரை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலை நீடிக்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்ட முடியாத சூழலும் தொடர்கிறது.

இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி அவ்வப்போது பேசின. அவ்வப்போது ஒவ்வொரு விதமான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தன.

அமைதிப் பேச்சுக்களும் நடத்தப்பட்டன, ஆயுதப் போர்களும் நிகழ்த்தப்பட்டன. ஆனால் முக்கால் நூற்றாண்டாக இந்த இனப்பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இப்போது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாட்டில் இனப்பிரச்சனை இருக்கிறது என்பதை மறைக்க முனைகிறது.

அண்மையில் ஜெனிவா தீர்மான வரைவில் இனமோதல்கள் என்ற சொற்பதம், இலங்கை அரசாங்கத்தின் அழுத்தங்களால் நீக்கப்பட்டது. பின்னர், வேறொரு இடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஆக இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, இது இன மோதல்கள் இல்லை அல்லது இங்கு அத்தகைய பிரச்சினையே இருக்கவில்லை என்பதை அடையாளப்படுத்துவதில் தற்போதைய அரசாங்கம் தீவிரமாக இருக்கிறது.

தாங்கள் இனவாத அரசியலை முன்னெடுக்கவில்லை என்று அது கூறுகிறது. ஆனால் இந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில், வடக்குக் கிழக்குத் தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்த எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.



அனுரகுமார அரசாங்கம் ஒரு வருடத்தை நிறைவு செய்துள்ள நிலையில், அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. அதிலும்கூட தமிழர் எவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. ஆனால் இது இனவாதமற்ற அரசு என்று சொல்லப்படுகிறது.

அது மாத்திரமின்றி, யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு கிடைத்த ஆசனங்களைக்கொண்டு, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற ஆணை தங்களுக்கே வழங்கப்பட்டதாகவும் கூறிக் கொள்கிறது.

தாங்கள் சொல்லுகின்ற தீர்வை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் அதுதான் தீர்வு என்று திணிக்கின்ற மனோபாவத்துடன் செயற்படுகிறது. இது பிரச்சினைகளுக்கு தீர்வு காணுகின்ற அணுகுமுறை அல்ல, இது பிரச்சினைகளைத் தீவிரப்படுத்தக் கூடியது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு நியாயமான தீர்வு பெற்றுத் தரப்படும் என வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அமைச்சராக உள்ள சந்திரசேகர் உள்ளிட்ட பலர் இதனைக் கூறியிருந்தனர்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும், இந்த வாக்குறுதியைக் கொடுத்திருந்தார். அண்மையில் அவர் மயிலிட்டிக்குச் சென்றிருந்தபோது அருகில் உள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக் காணி உரிமையாளர்கள், ஜனாதிபதியைச் சந்திக்க முயன்றபோது பொலிசாரால் அடித்து விரட்டப்பட்டனர். இந்த இடத்தில் அரசாங்கத்தின் இன்னொரு முகம் வெளிப்பட்டது.

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்ட காணிகள் தனியாருக்குச் சொந்தமானவை. அவை இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டது. அதற்கு புராதன விகாரை என்று பெயரும் இடப்பட்டிருக்கிறது. ஆனால் புத்த சாசன அமைச்சில் அப்படி ஒரு விகாரை இருப்பதாக எந்தப் பதிவுகளும் இல்லை. இதனை கூறியிருப்பவர், புத்த சாசன அமைச்சர் பேராசிரியர் சுனில் செனவி.

தையிட்டி விகாரையை அகற்றிவிட்டு உரிமையாளர்களிடம் காணிகளை ஒப்படைத்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும். ஏனென்றால், இந்த விகாரை பூர்வீக நிலத்தில் அமைந்ததோ பூர்வீகமான ஒன்றோ அல்ல. நிரந்தரமான வழிபடுநர்களைக் கொண்டதும் இல்லை. அந்தப் பிரதேசத்தில் பௌத்தர்கள் யாரும் வாழவும் இல்லை. ஆனால், அரசாங்கம் அதற்குத் தயாரில்லை.



இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்போம் என்று கூறிவிட்டு, காணி உரிமையாளர்களுக்கு மாற்று காணி வழங்குவதற்கான ஏற்பாடுகளையே முன்னெடுக்கிறது.

ஏற்கனவே தீர்வாக ஒன்றைத் தீர்மானித்து விட்டு அதனைத் தமிழ் மக்கள்மீது திணிக்கும் நடவடிக்கை இது.

இதற்கு வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனும் துணை போகிறார்.

இந்தப் பிரச்சினை ஓரிரு மாதங்களுக்குள் தீர்க்கப்பட்டு விடும் என்று, ஒகஸ்ற் மாதம் அமைச்சர் சந்திரசேகர் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். அதற்குப் பிறகு சரியாக ஒரு மாதம் கழித்து, புத்தசாசன அமைச்சர் சுனில் செனவி, இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண முடியாது என்றும், இது பல அமைச்சுகளுடன் தொடர்புடைய விடயம் என்றும் கூறியிருந்தார்.

ஆனால் இப்பொழுது இந்தப் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கேள்வி எழுப்பியபோது, அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஓரிரு வாரங்களில் இந்தப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும், அதற்கான தீர்வு முன்வைக்கப்படும் என்று கூறியிருக்கிறார். கஜேந்திரகுமார் சொல்வதுபோல, செயற்பட்டால் நாட்டில் மதப் பிரச்சினை ஏற்பட்டு விடும் என்றும், அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படியானால் அதன் அர்த்தம் என்ன? என்று புரிந்து கொள்வது கடினம் அல்ல. விகாரை அகற்றப்படாது. விகாரை அமைக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் வேறு காணிகளை வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

இதுதான் அரசாங்கம் சொல்லப்போகும் தீர்வு. இது சுமுகமான தீர்வு அல்ல. திணிக்கப்படும் தீர்வு.

விகாரையை அகற்றுவது பௌத்தர்களுக்கு வலிக்கும் எனக் கவலைப்படும் அரசாங்கம், சொந்தக் காணிகளை இழந்தவர்களின் கவலையை ஏன் கவனத்தில் கொள்ள மறுக்கிறது?

மாற்றுக் காணி என்பது, ஏற்கனவே முன்வைக்கப்பட்டு, உரிமையாளர்களால் நிராகரிக்கப்பட்ட தீர்வு. அதனை அரசாங்கம் புதிதாக முன்வைக்கப் போவதில்லை. காணிகளை அபகரித்து விட்டு, உரிமையாளர்களுக்கு மாற்று இடம் தருவதாகக் கூறுகிறது. அதனைத் தான் இங்கு நடைமுறைப்படுத்த முற்படுகின்றனர்.

மன்னார் தீவில் காற்றாலைகள் அமைக்கப்படுவதற்கு எதிராக இரண்டு மாதங்களுக்கு மேலாக மக்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

காற்றாலைகள் அமைக்கப்படுவதால் தங்கள் வாழ்வாதாரம், தங்கள் பூர்வீக நிலம் பாதிக்கப்படுவதாக அவர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டுகளை அரசாங்கம் கவனத்தில் கொள்வதாக இல்லை.

மக்களின் எதிர்ப்பை மீறி பொலிசாரையும், அதிரடிப்படையையும் வைத்துக்கொண்டு காற்றாலை நிறுவனங்களுக்கு சார்பாக செயற்படுகிறது. பொது மக்களைத் தாக்கிவிட்டு காற்றாலை உபகரணங்கள் மன்னார் தீவில் கொண்டுபோய் இறக்கப்பட்டிருக்கின்றன.

மன்னார் தீவில் காற்றாலைகள் அமைக்கப்படுவதற்கு கத்தோலிக்க மதகுருமாரும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். திடீரென மன்னார் ஆயர், ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது.

இதன்போது, காற்றாலைத் திட்டத்திற்கு ஆயர் இணங்கியதாகத் தகவல் வெளியானது. ஆனால் ஆயர் அதனை மறுத்திருக்கிறார்.

மன்னாரில் 14 காற்றாலைகளை அமைப்பதில், அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் அவர் கூறி இருக்கிறார்.

தமிழ் மக்களின்மீது எத்தகைய பலத்தைப் பிரயோகித்தும் காற்றாலைத் திட்டத்தை செயற்படுத்துவதில் அனுரகுமார அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

ஆக, பிரச்சினையை எதிர்கொள்ளும் மக்களின் கருத்துகள் இங்கு மதிக்கப்படவில்லை. கேட்கப்படவில்லை.

அனுர அரசாங்கம் தான் எதனைத் தீர்வாக நினைக்கிறதோ அதனைத்தான் தமிழ் மக்களுக்குத் திணிக்க முனைகிறது.

இப்படிப்பட்ட அரசாங்கம் தமிழரின் இனப்பிரச்சினைக்கும் தீர்வை வழங்காது, திணிக்கவே பார்க்கும்.

விளம்பரம் பத்திரிகையை எப்பொழுதும் எங்கிருந்தும் 24 மணிநேரமும் வாசிக்க
vlambaram.com
416.282.8059

Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-14 6:55 PM Page 7



# விஜய் ரசிகர்கள் வெறி பிடித்தவர்கள்! – நேர்காணல் – பத்திரிகையாளர் இதயா

நேர்கண்டவர்:கண்ணன்

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

தமிழ்நாடு அரசியலில் விஜய் வருகையின் தாக்கங்கள் குறித்து சென்ற இதழில் பேசியிருந்தோம். இந்நிலையில், விஜய்யின் கரூர் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகியிருக்கின்றனர். இதற்குக் காரணம் விஜய் மற்றும் அவரது கட்சியினரின் அலட்சியம் என்றும் இல்லை அரசாங்கம்தான் பொறுப்பு, விஜய் கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வருவார்கள் என்று தெரிந்தும் அரசாங்கம் சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மாறுபட்ட கருத்துகள் வெளிவந்துள்ளன. இன்னும் சிலர், "மக்களேதான் இதற்கு காரணம் ஒரு நடிகனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில், ஆபத்து என்று தெரிந்தும் சென்றிருக்கின்றனர்" என்கின்றனர்.

கேள்வி: விஜய் கூட்டும் கூட்டங்களுக்கு இப்படியொரு ஆபத்து உள்ளது என்று எச்சரித்த ஒரே பத்திரிகையாளர் நீங்கள்தான். கரூர் சம்பவம் குறித்து உங்களின் கருத்து என்ன?

பதில்: இதற்கு முதலும் முழுவதுமான காரணம் விஜய்யும் அவருடைய அணியும்தான். தமிழ்நாட்டு மக்கள் எம்.ஜி.ஆர், பின்னர் ஜெயலலிதா என்று திரையுலகத்தினரை தங்களை ஆள்பவர்களாக விரும்பி ஏற்றுக்கொண்டனர். அவர்களுக்குப் பின்னால் அரசியலுக்கு வந்த நடிகர் விஜய்காந்த் எட்டு-பத்து சதவீத வாக்குக்கு மேல் வாங்கவில்லை. அதனால், தமிழரிடையே சினிமா மோகம் குறைந்துவிட்டது என்று நினைத்தேன். ஆனால், நான் தமிழரை தப்புக்கணக்கு போட்டுவிட்டேன் என்றுதான் தெரிகிறது. சினிமாகாரர்களின்மீது மக்களின் ஆர்வம் இன்னும் குறையவில்லை. நடிகர், நடிகைகள் எங்கே வந்தாலும், (கோயில், திரையரங்கம், மைதானம், சாலை) அங்கெல்லாம் கூட்டம் அலைமோதுகிறது. இதில் அபாய நிலையில் குழந்தைகளையும் கூட்டி வருகின்றனர். விஜய்யும் தன்னைப் பார்க்க மக்கள் கூட்டம் வரும் என்று தெரிந்தேதான் அரசியலுக்கு வந்துள்ளார். ஆனால், இப்படி தன்னைப் பார்க்க, கூடும் கூட்டத்தை கையாளவும் அவருக்குத் தெரியவேண்டும். அவரைப் பார்க்க வரும் மக்கள் மின்கம்பம், ஜெனரேட்டர், மரம், கட்டிடங்கள் உச்சி என்று ஏறி நின்று பார்ப்பதை தவிர்க்கச் சொல்லவேண்டும். எல்லாவற்றையும்விட முக்கியம் அவரும் சொன்ன நேரத்திற்கு வரவேண்டும்.

கரூரில் சனிக்கிழமை வேலை நாள். ஆனாலும் விஜய் தாமதமாக வந்ததால் எல்லோரும் வேலை முடிந்து கூட்ட இடத்துக்கு வர ஆரம்பித்து விட்டனர். இதைப் பார்த்து காவல்துறையினர் கூட்டம் அதிகமாகத் தெரிவதால், விஜய்யிடம் நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டு வேறு ஒருநாள் வைக்குமாறு கேட்டுள்ளனர். ஆனால், விஜய் ஏற்கவில்லை. அதன் விளைவுதான் இத்தனை உயிர் பலிகள்.

கேள்வி: கரூரில் விஜய் பேச ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அசம்பாவிதங்கள் நடந்து விட்டன என்று வெளியாகியுள்ள காணொளிகளில் தெரிகிறது. ஒருவர் தனது மனைவியும் இரண்டு குழந்தைகளும் இறந்து போய் விட்டனர் என்றும், அவர்கள் விஜய் பேச்சைக் கேட்கவே இல்லை. அதற்கு முன்பாகவே இறந்துவிட்டனர் என்று கூறுகிறார். இவ்வளவு நடந்தும் ஏன் இரண்டாம் கட்ட தலைவர்கள், அமைப்பாளர்கள் யாரும் பார்க்கவில்லை?



பதில்: உண்மைதான் விஜய் பேசுவதற்கு முன்பே இருபது பேர்வரை இறந்திருக்கலாம் என்று காவல்துறையினரும் கூறுகின்றனர். திமுகவில் செந்தில் பாலாஜி, கே.என். நேரு என இரண்டாம் கட்டத் தலைவர்களுக்கு அந்தந்த பகுதிகளில் செல்வாக்கு இருக்கும். சொன்னால் தொண்டர்கள் கேட்பார்கள். அதிமுகவிலும் இதுதான் நிலை. விஜய் கட்சியில் செல்வாக்கான இரண்டாம் கட்ட தலைவர்களே இல்லை. அதேநேரம், இரண்டாம் கட்டத் தலைவர்கள் மட்டுமல்ல விஜய்யே சொன்னாலும் அவரது ரசிகர்கள் கேட்கமாட்டார்கள். அவ்வளவு வெறி பிடித்தவர்கள் அவர் பின்னால் அணி திரண்டுள்ளனர்.

மின்வெட்டு விபத்துக்கு ஒரு முக்கியமான காரணம் என சொல்கின்றனர். மின்சாரத்தைத் துண்டித்ததைப்பற்றி அரசாங்கத்தைக் குறைகூற முடியாது. ஏனென்றால் விஜய் ரசிகர்கள் மின்கம்பத்தின் மேல் ஏறுவார்கள். அதனால், விஜய் கட்சியினரேதான் மின்சாரத்தைத் துண்டிக்கும்படி மனு கொடுத்துள்ளனர். விஜய் இருட்டுவதற்கு முன்பே சென்றிருக்க வேண்டும் அப்போது வருவதாகத்தானே அவர் சொன்னார். தாமதமாக சென்றதே தவறுதான்.

விபத்து நடந்த இடம் குறுகலான சந்து என்று கூறுகின்றனர். ஆனால், அது எண்பதடி சாலை. இந்த சாலையில்தான் அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால், அதிமுக தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கூட்டம் நடந்தது. விஜய் கட்சியினர் கேட்ட இடம் இதைவிட குறுகலானது. அவர்கள் கேட்ட இடங்களில் நடத்தி இருந்தால் அது இன்னும் உயிர் பலியை அதிகப்படுத்தியிருக்கும். அவர்கள் கேட்ட இடம் நகருக்குள் உள்ளது. நகருக்குள் நுழைந்து விஜய் வெளியே வரவது கடினமாகிவிடும்.

கேள்வி: மீண்டும் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் பற்றிப் பேசலாம். சீமான் ஓட்டை விஜய் பிரிப்பார் என்று சொன்னீர்கள். இதனால்த்தானோ என்னமோ சீமானின் நாம் தமிழர் கட்சியினருக்கும் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியினருக்கும் இடையே ஒரு மோதல் உருவாகியிருக்கிறது. இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?



பதில்: சீமானுக்கு இரண்டுவிதமான வாக்குகள் இருக்கிறது என்று நான் பார்க்கிறேன். ஒன்று சிந்தாந்த ரீதியான வாக்கு. அவருடைய தமிழ் தேசியம், பிரபாகரன் மற்றும் விடுதலைப்புலிகள் ஆதரவு, கீழ்த்தட்டு மக்களுக்கான பேச்சு, ஆடு, மாடுகளுக்கும் குரல் கொடுப்பது, மரங்கள், மலைகள் என இயற்கைக்காகப் பேசுவது, ஆடு மேய்ப்பவனுக்கு அரசு வேலை என்று சொல்வது, இந்த மாதிரிப் பேசுவதால் வரும் ஓட்டு சிந்தாந்த ரீதியான ஓட்டு. இந்த ஓட்டு சீமானை விட்டுப் போகாது. விஜய் வந்தாலும் அது போகாது.

இன்னொன்று திமுக, அதிமுக இரண்டு கட்சியும் வேண்டாம், வேறு ஒருவர் வரட்டும் என்று நினைக்கிற ஓட்டு. இந்த மக்கள் விஜய் போன்ற பிரம்மாண்டத்தைப் பார்த்து மாற வாய்ப்பு உள்ளது. அதனால் சீமானுக்கு ஒரு கணிசமான ஓட்டு இழப்பு நிச்சயம் உண்டு.

கேள்வி: திடீரென்று விஜய் அரசியலுக்கு வந்ததுக்கு பின்னால் யாரோ இருக்கின்றனர் அவர்கள்தான் அவரை இயக்குவது என்று பேசப்படுகிறது. 'தினமணி' நாளிதழில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் பாஜக பின்னாலிருந்து விஜய்யை இயக்குகிறது என்று கூறியிருந்தார். நீங்கள் எப்படிக் கணிக்கிறீர்கள்?

பதில்: யார் அரசியலுக்கு வந்தாலும் இந்தக் கருத்து இருந்துகொண்டுதான் இருக்கும். ரஜினி, கமல் வரும்போது இதே தான் சொன்னார்கள். யாராவது ஒருத்தர் புதிதாக வருபவரை நம்பி பணத்தைக் கொட்டிக் கொட்டிக் கொடுத்து அரசியல் பண்ண சொல்வார்களா? இது மனிதனின் கற்பனைதான். தொழிலதிபர்கள் நாளைக்கு இவர் வந்தால் தனக்குப் பிரச்சினை ஆகக் கூடாது என்று நினைத்து பணத்தைக் கொடுப்பார்களே தவிர நீங்கள் சொல்வதைப்போல யாரும் பணத்தைக் கொடுக்க மாட்டார்கள்.

கேள்வி: விஜய் கட்சியுடன் கூட்டணிக் கட்சிகள் சேருவதற்கு வாய்ப்பிருக்கு என்று நம்புகிறீர்களா?

பதில்: பல கட்சிகள் ஆர்வமாக இருக்கின்றனர்.

கேள்வி: அதேபோல் பல மாவட்டங்களில் இருந்து, முன்பு அமைச்சர்களாக இருந்தவர்கள், இரண்டாம் கட்டத் தலைவர்கள் விஜய் கட்சிக்கு வர விரும்புவதாகவும் ஆனால், அதற்கு இவர் எந்தப் பதிலும் சொல்லவில்லை என்றும் தெரிகிறது. கள அனுபவம் உள்ளவர்களைச் சேர்க்காமல் இருப்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இது ஒரு புதிய 'ரத்தம் பாய்ச்சிய கட்சி', 'ஊழலுக்கு எதிரான கட்சி', 'சமூக கற்பனைகளுக்கு அப்பாற்பட்ட கட்சி', 'சமூக சிந்தனை உள்ள கட்சி' என்றெல்லாம் சொல்லிவிட்டு பழைய கட்சியுடன் கூட்டணி வைத்தால் அல்லது பழைய ஆட்களைச் சேர்த்துக்கொண்டால், அது பலவீனமாகும் என்று நினைக்கலாம். அதனால் இப்போதைக்கு தன்னுடன் யாரையும் சேர்ப்பது மாதிரித் தெரியவில்லை. தேர்தல் நெருங்கும்போது டிசெம்பருக்கு அப்புறம் தெரியவரும்.

கேள்வி: உங்கள் கணிப்பில் இந்தத் தேர்தலில் யார் யார் தமிழக அரசியல் களத்திலிருந்து காணாமல் போவார்கள்?

பதில்: எந்தக் கட்சியும் தனியாக நின்றால் காணாமல் போய்விடுவார்கள். அதிமுகவுடன் சேர்ந்ததால்த்தான் விஜயகாந்தின் தேமுதிக கடந்த தேர்தலில் சிறு அளவு ஓட்டையாவது வாங்க முடிந்தது. எனவே, சிறு கட்சிகள் யாரும் தனியாக நிற்கும் ஆபத்தைச் செய்ய மாட்டார்கள்.

கேள்வி: வைகோவின் மதிமுக?

பதில்: திமுகவினர் என்ன சொன்னாலும் மதிமுக கூட்டணியை விட்டுப்போகப் போவது இல்லை. "எத்தனை சீட்டு கொடுத்தாலும் பரவாயில்லை. நாங்கள் உங்களுடன் தான் இருப்போம். கூட்டணியில் பங்கு கேட்க மாட்டோம், ஆட்சி அங்கீகாரத்தில் பங்கு கேட்க மாட்டோம். கூட்டணியை விட்டு வெளியே போகமாட்டோம்" என்று கூறுகின்றனரே. வெளியேறினால், கதை முடிந்தது என்று அவர்களுக்குத் தெரியும்.

கேள்வி: உதயநிதி ஸ்டாலினும் சுற்றுப்பயணம் செல்கிறார். தமிழ்நாட்டின் எதிர்கால அரசியல் உதயநிதி - விஜய் என்று மாறுமா?

பதில்: வாய்ப்புள்ளது.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

## நாமும் நமது இல்லமும் 687

# கனடாவின் வீட்டுவசதி சந்தை 2025ஆம் ஆண்டில் மாறிவரும் வாய்ப்புகள்




ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969


கனடாவின் வீட்டுச் சந்தை குறிப்பிடும்படி அமைதியாக இல்லை. இதனால் ஆதனம் வாங்க நினைப்போர் அல்லது முதலீட்டாளர்களுக்குப் புதிய வாய்ப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

CMHC வெளியிட்ட 2025ஆம் ஆண்டின் இலையுதிர் கால ஆதன விநியோக அறிக்கையின்படி, 2025 தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய வீடுகள், 2024 நிலைக்கு ஒத்ததாகவே உள்ளன.

ஆனால், கட்டுமானத்தில் மாற்றம் காணப்படுகிறது. வாடகை வீடுகள் மற்றும் தரைத்தள வீடுகள் (Detached, Semi-detached & Hached Houses) அதிகமாக எழுப்பப்படுகின்றன. அதே சமயம் அடுக்குமனை (Condo) கட்டுமானம் பல முக்கிய நகரங்களில் மந்தமாகியுள்ளது.

மறு விற்பனைக்கான வீட்டுப் பட்டியல் கடந்த ஆண்டைவிட (2024) சுமார் 9% அதிகரித்துள்ளது.

இந்த மாற்றங்கள் வசதி, செலவு, செலுத்தக்கூடிய தன்மை அல்லது வாழ்க்கை முறைக்கு ஏற்ற வீடுகளைத் தேடுவதில் உதவக்கூடும்.

மாறும் வட்டி வீதங்கள் (Variable Rates) கனடா வங்கிக் கொள்கைக்கு உட்பட்டவை. அது எரிசக்திச் செலவு, சுங்கவரி, அரசு செலவுகள் போன்றவை மூலம் பாதிக்கப்படும் பணவீக்கம் (Inflation) அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.




நிலையான வட்டி வீதங்கள் (Fixed Rates) அரசு பத்திர வருமானத்துடன் (Government Bond Yields) தொடர்புடையவை. உலக சந்தை மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையைப் பொறுத்து விரைவாக உயர்ந்தோ குறைந்தோ விடலாம்.

இத்தகைய சூழலில், வட்டி விகிதத்தை முன்கூட்டியே உறுதிசெய்தல் (Rate Hold) திடீர் உயர்விலிருந்து பாதுகாக்கும். அதேசமயம், கடன் (Mortgage) ஒப்பந்தம் நிறைவடையும் முன் விகிதம் குறைந்தால் அதற்கேற்றாற்போல் வட்டி வழங்கும் முன்னேற்பாடான வீட்டுக் கடன் திட்டம்.

ரொறொன்ரோவில் மாதாந்த அடமானக் கடன் செலுத்துவதைத் தவற விட்டதனால் power of sale மூலம் வீட்டு விற்பனை உயர்வு உருவாகியது.

ரொறொன்ரோ நகரின் வீட்டுச் சந்தை மேலும் ஓர் அச்சுறுத்தும் சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளது. 2025 ஓகஸ்ற் மாதத்தில் மட்டும் 149 புதிய Power of Sale (கடன் தவறிய வீட்டு விற்பனை) பட்டியல்கள் பதிவாகியுள்ளன. இது கடந்த ஆண்டைவிட 30% அதிகம். மேலும், 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 மடங்கு அதிகம்.

2025 செப்ரெம்பர் 19ஆம் திகதியளவில், மொத்தம் 1,232 Power of Sale பட்டியல்கள் ரொறொன்ரோவில் இருந்தன. 2022 முதல், இந்த நெருக்கடியான விற்பனைகள் சாதாரண வீட்டுப் பட்டியல்களைவிட ஐந்து மடங்கு வேகமாக அதிகரித்துள்ளன. தற்போது, புதிய மாதாந்திர பட்டியல்களில் 1.1% வீடுகள் Power of Sale வகையில் உள்ளன.

கனடாவில் கடன் வழங்குநர்கள் (Lenders) வீட்டு உரிமையை விற்பனை முடியும்வரை கடன் வாங்கியவரின் பெயரில் வைத்திருப்பர். ஆனால், ஆதனம் power of saleஇனால் விற்கப்பட்ட விலை, கடன் தொகைக்குக் குறைவாக இருந்தால், அந்தக் குறைந்த தொகைக்கான அடமானக்கடனின்




பெறுமதி அடமானம் பெற்றவரிடமிருந்து முற்றாகப் பணம் வசூலிக்கும் உரிமையும் கடன் கொடுத்தவர்களுக்கு உண்டு.

முக்கிய வங்கிகள் மற்றும் Reverse Mortgage நிறுவனங்கள் பெரும்பாலும் இத்தகைய Power of Sale பட்டியல்களை வெளிப்படுத்துவதில்லை. இருப்பினும், அவற்றின் கடன் நிலுவைகள் மற்றும் நஷ்டக் கடன்கள் அதிகரித்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# நெருக்கடிக்குள்...

4ஆம் பக்கத்தொடர்ச்சி

கொழும்பு துறைமுகத்தில் இருந்து 323 கொள்கலன்கள் எந்தச் சோதனையும் இல்லாமல் விடுவிக்கப்பட்ட விடயத்தில் அவரது பெயர் அடிபட்டது. அதனை மறைப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறு விடுவிக்கப்பட்ட கொள்கலன் களில்தான் ஐஸ் போதைப் பொருளை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்கள் கொண்டு வரப்பட்டதாக இப்போது கூறப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னர் பிமல் ரத்நாயக்கவிடம் இருந்து துறை முகங்கள் விமான நிலைய அமைச்சு பறிக்கப்பட்டிருக்கிறது.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு 65 மில்லியன் டொலர் நிதியை வழங்குவதாக இந்தியா அறிவித்து ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டது. அந்தத் திட்டத்தை செயற்படுத்த விடாமல் தடுத்து வைத்திருந்தவர்தான் பிமல் ரத்நாயக்க. இது அண்மைய நாட்களாக சர்ச்சையை ஏற்படுத்தி வந்தது.

இந்த இரண்டு காரணிகளும், அவருக்கு எதிரான சூழலை உருவாக்கியிருக்கிறது.




இவை அரசாங்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்ற நிலையில்தான், அவரது பதவிப் பறிப்பு நடந்திருக்கிறது.

ஆக அரசாங்கத்தின்மீது நம்பிக்கையீனம் அதிகரிக்கின்றபோது, தனிநபர்களின் பதவிகளைக் காப்பாற்றாமல் முடிவுகளை எடுக்க வேண்டிய நிலை அனுரகுமார திசாநாயக்கவுக்கு ஏற்படும்.

அவ்வாறான நிலை வரும்போது அரசாங்கத்தின் பெயரைக் காப்பாற்றுவதற் காக, ரங்க திசாநாயக்க பலிக்கடா ஆக்கப்படுவதுகூட தவிர்க்க முடியாததாக இருக்கும்.




Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-14 6:55 PM Page 9



# தமிழ் சமூக மையம் – நேர்காணல் – குபேஸ் நவரத்தினம்

கனடா, ரொறொன்ரோ தமிழ் சமூகத்தில் தற்போது முக்கிய பேசுபொருளாக இருப்பது புதிதாக நிர்மாணிக்கப்பட இருக்கும் புதிய தமிழ் சமூக மையம்தான். அத்திட்டம் பற்றியும், அது எவ்வாறு அமையப் போகிறது, அதனால் எத்தகைய நன்மைகள் எமது சமூகத்துக்குக் கிடைக்கும், அதன் இன்றைய நிலைமை யாது என்பது பற்றி அறிய விரும்பினோம். இந்தச் செயல் திட்டத்தில் உண்மையாகவும், உற்சாகமாகவும் இயங்கிக் கொண்டிருக்கும் ஆளுமைகளில் ஒருவரான திரு. குபேஸ் நவரட்ணம் அவர்களை ஓர் இனிய மாலைப்பொழுதில் விளம்பரம் பத்திரிகையின் சார்பில் சந்தித்து உரையாடினோம்.

சமூகத்தின்பால் உண்மையான அக்கறையும், பரந்த கண்ணோட்டமும் கொண்ட உற்சாகம் நிரம்பிய அந்த இளைய சட்டத்தரணியான குபேஸ் அவர்கள் தன் பெறுமதி மிக்க நேரத்தை ஒதுக்கி பல்வேறு விடயங்களையும் எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

உரையாடலின் தொடக்கத்தில் அவரது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் வளர்ச்சி பற்றிக் கேட்டோம். அது மிகவும் சுவாரஸ்யமானதாக இருந்தது.

பின்னர், தமிழ் சமூக மையத்தின் செயல்திட்டம் பற்றிப் பேசத் தொடங்கினோம் அவரது கண்கள் ஒளிவிட அவர் பேசப்பேச வியப்பாகவே இருந்தது.

தமிழ் சமூக மையம் என்பது எவ்வளவு பெரிய செயற்திட்டம், எவ்வளவு பாரிய பொருட்செலவு மற்றும் நிதிச்செலவு கொண்டது. இத்தகைய பெரிய பணியில் பொதுமக்களை எவ்வாறு இணைப்பது என்பது எமது மனதில் பெரிய கேள்வியாய் எழுந்தது.

ஆனால், இந்த அவருடனான கனதியான உரையாடல் நிறைவடையும்போது "இவர்கள் இதனை நிச்சயமாக வெற்றிகரமாகச் செய்து முடிப்பார்கள்" என்ற நம்பிக்கை எங்கள் மனதில் நிலை பெற்றுவிட்டது.

புலம்பெயர் தமிழர் சமூகம் எவ்வளவு பெரிய சக்தியென எங்களுக்குத் தெரியும். கடந்த முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகளாக தாயகத்தில் நிகழ்ந்த பேரழிவு தந்த யுத்தத்தில் தங்கள் உறவுகளைத் தாங்கி நின்றவர்கள் எம்மவர்கள். போர் ஓய்ந்த பின்பும் தமது இரத்த உறவுகளுக்கு எப்படியெல்லாம் உதவி செய்து வருகின்றனர் என்பது பற்றியும் நாம் நன்கறிவோம்.

ஏன், அண்மையில்கூட வடஅமெரிக்காவின் இரண்டு முக்கிய பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகளை அமைப்பதற்கு இலட்சக்கணக்கில் நிதியளித்து அதைச் செய்து முடித்தவர்கள். அவர்களால் இதுவும் முடியும் என்ற நம்பிக்கை எழுந்தது.

இதைவிட இந்தத் திட்டத்தை முன்னின்று நடத்தும் அக்குழுவினர் (குபேஸ் நவரத்தினம் உட்பட) ஐயன் வள்ளுவர் கூறியது போல்,

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்".**

என்ற குறளுக்கு மிகவும் பொருத்தமானோர்.

- விளம்பரம் பத்திரிகைக்காக 'பாரி'

குபேஸ் உடனான உரையாடல் தொடர்ந்தது.




**கேள்வி: வணக்கம் திரு. குபேஸ் அவர்களே! நீங்கள் கனடாவிலா பிறந்தீர்கள்? தங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.**

**பதில்:** நான் தாய்நாட்டைவிட்டு வெளியேறி, 1983ஆம் ஆண்டில் என் மூன்று வயதில் ஜெர்மனிக்குச் சென்று 1985ஆம் ஆண்டுவரை ரெட்மாண்டில் வாழ்ந்தேன். நான் படித்ததெல்லாம் கனடாவில்தான். ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்நிலைபள்ளி (17 வயது) வரை, கனடியர்களுடன்தான் பழகினேன். தமிழ் ஆட்களுடன் பழக வாய்ப்பில்லை. உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்தவுடன் தான் தமிழருடன் பழக்கம் ஏற்பட்டது. யுனிவர்சிட்டியிலும் கொஞ்சம் பழகுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஆனால், எங்கள் வரலாற்றை யாரும் எனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை. எனக்கு அப்போது தமிழரோடு எவ்வித தொடர்புமிருக்கவில்லை. நான் 2004இல் கொம்பியூட்டர் இன்ஜினியரிங் படிப்பு முடித்தேன். அதன்பின்பு தாய்நாட்டுக்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு போனதும்தான் பல விடயங்கள் எனக்குத் தெரிந்தது. எனது 24 வயதில் ஓர் இயக்கத்துடன் தொடர்பு வந்தது. இயக்கம் ஒழுங்கு செய்த ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக எல்லா நாடுகளிலுமிருந்தும் இளைஞர்களைத் திரும்ப நாட்டிற்கு அழைத்து அவர்களுக்கு அங்குள்ள நிலைமையைக் காட்ட வேண்டும் என்ற யோசனையை செயல்படுத்த நினைத்தனர். அதனால் நானும் அந்த நிகழ்ச்சியில் சேர்ந்தேன். எனக்கு அப்போது தெரியாது, இது கொம்பியூட்டர் பயிற்சி கொடுக்கும் சிறிய நிகழ்ச்சித்திட்டமென்று. விடுமுறையை உற்சாகமாகக் கழிக்கவே நான் வந்தேன்.

அந்த ஒன்றரை மாதத்தில் காயப்பட்ட போராளிகள் காம்ப்பில் அவர்களுக்கு நான் கொம்பியூட்டர் பாடம் சொல்லிக் கொடுக்க நேர்ந்தது. அவர்களுடனேயே சிலகாலம் தங்கி இருந்தேன்.

மாதம் முழுவதும் அந்தப் போராளிகளின் நிலைமையைக் கேட்டு, அங்குதான் முதன்முதலாக எமது பிரச்சினைமீது ஈடுபாடு வந்தது. எனக்குச் சட்டம் படிக்க வேண்டும் என்ற எண்ணம் அப்போதுதான் வந்தது. கஷ்டப்பட்டுத் திணறித் திணறி தமிழ் கற்றுக் கொண்டேன், பேசினேன். காம்பில் ஆங்கில வார்த்தையே பேச மாட்டார்கள். அந்தச் சூழலில்தான் தமிழ் கற்றுக்கொள்ள நேர்ந்தது. அப்போது நான் கொம்பியூட்டர் இன்ஜினியரிங்க் தான் படித்திருந்தேன். பின்பு தேர்வு எழுதி வெஸ்ற்ரேன் யூனிவர்சிட்டியில் சட்டம் படிக்க சீட் கிடைத்தது. எனக்கு சட்டம் பற்றி எதுவும் தெரியாது. அரசாங்கம் பற்றியும் தெரியாது. நான் சட்டக் கல்லூரியில் முதன்முதலில் 'இலங்கையில் 1983இல் நடந்த கலவரம்' பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதினேன். 2009இல் சட்டத்தில் பட்டம் பெற்றேன்.

2009இல் கற்றுக்கொண்ட சட்ட நுணுக்கங்களை வைத்துத்தான் நான் ஹரி ஆனந்தசங்கரியுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. 1980இல் ஹரி அரசியலில் இருந்தார். அவரிடம் நான் பயிற்சி எடுக்கும்போதுதான் எல்லாச் சமூக மக்களுடனும் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அப்படித்தான் நான் தமிழ் சமூகத்தில் இணைந்தேன். அப்பொழுது தான் தமிழ் சமூக மையம் பற்றி அறிந்து கொண்டேன்.



**கேள்வி: தமிழ்சமூக மையம் பிறந்த கதை பற்றி சொல்லுங்கள்.**

**பதில்:** 2004இல் இருந்து தமிழரிற்கான தமிழ் சமூக மையம் வேண்டும் என்று பலரும் கேட்டு வந்தனர். ஆனால் இங்குள்ள கனடிய அரசியல்வாதிகள், நீங்கள் ஒன்றாய் இணைந்து வந்தால் அரசாங்கம் நிதி கொடுப்பது எளிது. பிரிந்து தனித்தனியே வந்தால் இலகுவல்ல என்றனர். அந்தச் செய்தி நீண்டகாலம் நீடித்தது. சில ஆட்கள் அதை முன்னிறுத்தி, சேம்பர் ஒப் கொமர்ஸ் (Chamber of Commerce), தமிழ் கனடியன் கொங்கிரஸ் (Canadian Tamil Congress) மற்றும் NCCT (National Council of Canadian Tamils) மூன்று பேரும் சேரவேண்டும் என்றனர். அபோதுதான் நான்கு பேர் கமிட்டியில் சேர்ந்தனர். அவர்கள்தான் சிவா, விமலச்சந்திரன், கீர்த்தனா, நேத்ரா ஆகியோர். நீதண் அவர்களும் சேர்ந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்து அதற்கு அரசாங்கத்தின் நிதி உதவி கிடைக்க வழி செய்தனர். எங்களுக்கு மட்டும்தான் ஒரு சமூக மையத்தை (Community Centre) அமைப்பதற்கு அங்கீகாரம் கிடைத்தது. அவர்களுக்கு ஐந்து குழுவினரிடமிருந்து விண்ணப்பங்கள் வந்திருந்தன. எங்களுக்கு மட்டுமே அந்த நிதி கிடைத்தது.

தமிழ் சமூகத்தின் மேல் அவர்களிற்கு நம்பிக்கை இருந்தமை காரணமாக இருந்திருக்கலாம். அப்போது ஹரி மத்திய அரசில் இருந்தார். ரொறொன்ரோ நகர பிதா ஜோன் ரோறி (John Tory) இதற்கு தமது முழுமையான ஆதரவைக் கொடுத்தார். இந்த நேரத்தில்தான் அந்த நிதி உதவி எங்களுக்குக் கிடைத்தது. வேறு சமூகங்களும் விண்ணப்பித்து இருந்தனர். அவர்களுக்கொன்றும் கிடைக்கவில்லை.

**கேள்வி: சமூக மையத்தில் (Community Centre)இல் என்னென்ன அமைய இருக்கிறது? இது ஒரு சமூகம் மையம் போல் இயங்குமா? அல்லது அதைவிட பெரியளவில் வேறு விடயங்களும் உள்ளனவா?**

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340 .9490 / 416.732.2228

# நானிலம் போற்றும் நட்பு - 75



– அகணி –
authorakani@gmail.com

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ளவற்றில் ஒன்றான கைந்நிலை நூலில் புலவர் புல்லங்காடனார் எழுதியுள்ள பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளைக் கடந்த மூன்று இதழ்களில் உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையின் உதவியோடு உரையாடினோம். இந்த நூலில் உள்ள மேலும் சில பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துகள் பற்றி உரையாடுவோம்.

நெய்தல் திணையில் நடைபெறும் மேலும் சில உரையாடல்களைக் கவனிப்போம். இப்பொழுது பாடல் 54இனைக் கவனிப்போம்.

“என்னையர் தந்த இற உணங்கல் யாம் கடிந்து,
புன்னையங் கானல் இருந்தேமா, பொய்த்து எம்மைச்
சொல் நலம் கூறி, நலன் உண்ட சேர்ப்பனை
என்னைகொல் யாம் காணுமாறு?”

உணங்கல் என்றால் பறவைகள் என்று உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். “என் தோழியே! என் தந்தை, உடன் பிறந்தவர் கவர்ந்து வந்த இறால் மீன்களைக் கவர வருகின்ற பறவைகளை ஓட்டியபடி புன்னை மரங்கள் பொருந்திய கானலில் இருந்தபோது பொய்யான புகழுரைகளைக் கூறி எம்முடன் இன்பம் துய்த்த நெய்தல் நிலத் தலைவனை இனிமேல் காணும் வழி யாது? ஆராய்ந்து கூறுக” என்று தலைவி வினவினாள்.

தனது காதலனை மீண்டும் எப்படிக் காணலாம் என்று தனது தோழியிடம் ஆலோசனை பெறும் விதமாக இந்தப் பாடல் உள்ளது. இந்தக் காலத்திலும் காதலைப் பற்றித் தொடக்க காலத்திலிருந்து உரையாடக் கூடிய உறவாக நட்பு உள்ளது. நெய்தல் நிலப் பாடல் என்பதால் நெய்தல் நிலக் காட்சியோடு பாடல் அமைந்துள்ளது.
இப்பொழுது பாடல் 56இனைக் கவனிப்போம்.

“நுரை தரும் ஓதம் கடந்து, எமர் தந்த
கருங் கரை வன்மீன் கவரும் புள் ஓப்பின்,
புகர் இல்லேம் யாம் இருப்ப, பூங் கழிச் சேர்ப்பன்
நுகர்வனன், உணடான், நலம்”.

புள் என்றால் பறவை என்று உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாட்டின் பொருளினைக் காண்போம். “நம்மவர் கொண்டு வந்த மீனின் வற்றலைக் கவரப் பறந்து வரும் பறவைகளை ஓட்டும் செயலில் மூழ்கி நாம் குற்றமற்றவராய் இருந்தோம். அப்போது அழகிய உப்பங்கழிகளை யுடைய நெய்தல் நிலத் தலைவன் இங்கு வந்து எம்முடைய நலத்தை நுகர்ந்தான். அவன் இன்று அதனை மறந்தான் போலும்” என்று தலைவி தனது காதலனைப் பிரிந்த துயரத்தை தோழியிடம் தெரிவிக்கின்றாள். இந்தப் பாடலில் நெய்தல் படக் காட்சிகள் அழகாக விரிந்துள்ளன.

இப்பொழுது பாடல் 57இனைக் கவனிப்போம். தோழி இரவுக் குறியிடம் தலைவிக்கு உணர்த்தியது.

“கொடு வாய்ப் புணர் அன்றில் கொய் மடல் பெண்ணைத்
தடவுக் கிளை பயிரும் - தண் கடல் சேர்ப்பன்
நிலவுக் கொடுங் கழி நீந்தி, நம் முன்றில்
புலவுத் திரை பொருத போழ்து”.

முன்றில் என்றால் பறவை என்று உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாட்டின் பொருளினைக் காண்போம். “தலைவன் உப்பங்கழி நீரை அடித்து அலையை எழுப்பி ஓசையை உண்டாக்குவான். அவ்வோசையைக் கேட்ட பனை மரத்தில் உள்ள அன்றில் பறவைகள் அஞ்சி ஓசை எழுப்பும். இவற்றின்மூலம் இரவில் தலைவன் வருகை புரிந்துள்ளான்” என்று தோழி குறிப்பாகக் கூறுகின்றாள்.

தலைவி அறிவதற்கு முன்பாகவே தோழி தலைவன் வருகையை அறிந்து அந்தச் செய்தியை தலைவிக்குக் கூறுவதாக இந்தப் பாடல் உள்ளது. நட்பிற்காக தோழி எவ்வளவு ஆவலுடன் தலைவன் வருகையை எதிர்பார்க்கின்றாள் என்பதை இங்கு அறிய முடிகின்றது. இந்தப் பாடலில் நெய்தல் நிலக் காட்சிகளையே தலைவன் வருகைக்கான அறிகுறிகளாகக் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது பாடல் 58இனைக் கவனிப்போம்.

“சுறா எறி குப்பை சுழலும் கழியுள்,
இறா எறி ஓதம் அலற இரைக்கும்
உறாஅ நீர்ச் சேர்ப்பனை உள்ளி இருப்பின்,
பொறாஅ, என் முன்கை வளை”.

எறி என்றால் எறிந்த என்று உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாட்டின் பொருளினைக் காண்போம். “சுறாமீனால் மோதி அடிக்கப்பட்ட மீன் குவியல்கள் சுழல்கின்ற உப்பங்கழிகளுள் இறால் மீன்களை வீசி எறிகின்ற அலைகளை உடைய கடற்கரைத் தலைவன் என்னுடன் கூடாது பிரிந்து சென்றுள்ளான். அப்பிரிவை எண்ணி நாம் கலங்கி இருப்பதால் என் முன்னங்கை வளையல்களும் பொறுக்க முடியாது கீழே விழுந்து விடுகின்றன” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

தனது தலைவனின் பிரிவினால் தான் எவ்வாறு உடலாலும் நலிந்துள்ளேன் என்று தலைவி தோழியிடம் கூறியுள்ளாள். இந்தப் பாடல் நெய்தல் நிலத்தில் வாழுகின்ற பொதுவான பிரிவுத் துயரத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.
இப்பொழுது பாடல் 59இனைக் கவனிப்போம்.

> " Things are never quite as scary when you've got a best friend."
> – Bill Watterson -

“தாழை குருகு ஈனும் தண்ணம் துறைவனை-
மாழை மான் நோக்கின் மடமொழி! - “நூழை
நுழையும் மட மகன் யார்கொல்?” என்று, அன்னை
புழையும் அடைத்தாள், கதவு”.

மடமொழி பேதைமையான சொல் எறிந்த என்று உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாட்டின் பொருளினைக் காண்போம்.

